விலை: சதம் 75

நல்லூர்க் கந்தசுவாமி
கோவில் உற்சவத்தில்
மலிவு விற்பனை
FIBRE GLASS நுண்ணிழைக் கண்ணாடியில் செய்யப்பட்ட நாகரிகமான வீட்டுத்தளவாடங்கள், பூச்சாடிகள், சமயலறை-குளியலறை உபகரணங்களுக்கு——
நல்லூர் காட்சிச்சாலை
ஆதீனத்துக்குமுன்
நல்லூர்
FIBERITE MOULDINGS
தம்பசிட்டி, பருத்தித்துறை.
Phone: 590. [0689]

ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆவணி 5 ஷவ்வால் 20 இதழ் 188
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 21-8-1981

இன்று மாலை
சோ
வை
சந்தியுங்கள்
யாழ். வீரசிங்கம் மண்டபம்
இரவு 7 மணி
அனுமதி வாசலில்
நெல்லியடி ஸ்ரீபரமானந்த
ஆச்சிரமம் இரவு 9 மணி
0683

# "கோரிக்கை நிறைவேறும்வரை கூட்டணி பகிஷ்கரிக்கும்!

## வன்செயல்களில் அரசாங்க எம்.பி.க்களுக்கும் பெரும் பங்குண்டு"

### செய்தியாளர் மாநாட்டில் 'அமிர்'

-நமது நிருபர் எஸ். மகாலிங்கசிவம்

**"நாட்டின் பல பகுதிகளிலும் அண்மையில் இடம்பெற்ற வன்செயல்களில் சில அரசாங்கப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பெருமளவில் பங்கு உண்டு. இவர்கள் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய பேச்சுக்களும், சுவரொட்டிகளும், சுலோகங்களுமே அண்மையில் காடையர்களினால் நாட்டின் பல பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்குப் பின்னணியாக அமைந்தது."**

மேற்கண்டவாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம், அண்மையில் இடம்பெற்ற வன்செயல்கள் தொடர்பாகச் செய்தியாளர்கள் மகாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையில் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது.

**வெளிநாட்டுச் சக்திகள்**

"இவ்வன்செயல்களில் வெளிநாட்டுச் சக்திகளுக்கு ஈடுபாட்டுள்ளனவென்ற அரசாங்கத்தின் கூற்றை ஏற்றுக்கொள்ளமுடியாது.

"இவ்வன்செயல்களை முழுக்க முழுக்க இனக்கலவரமென்றே நான் சொல்கிறேன். இக்கலவரத்தின்போது சிங்களக் கடைகள் வேண்டுமென்றே தாக்கப்படவில்லை. தமிழ்க் கடைகளுடன் இடையிடையே இருந்த சில சிங்களக் கடைகள் தான் தற்செயலாகத் தாக்கப்பட்டன.

**கூட்டணிக்கு தொடர்பில்லை**

"வடக்கில் இடம்பெற்ற வன்செயல்களைக் கண்டிக்கின்றோம். அதனையும் கூட்டணியையும், தமிழ் மக்களையும் தொடர்புபடுத்தமுடியாது.

"எமது 5 அம்சக் கோரிக்கையையும் அரசாங்கம் நிறைவேற்றும்வரை நாம் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிப்போம்.

[6ம் பக்கம் பார்க்க]

## சிறிமா நடவடிக்கை

(கொழும்பு)

திருவாளர்கள் மைத்திரிபால சேனநாயக்கா, அனுரா பண்டாரநாயக்கா, விஜயசிறி உட்பட பதின்மூன்று சுதந்திரக்கட்சி உயர்மட்ட உறுப்பினர்களை திருமதி சிறிமா பண்டாரநாயக்கா நேற்றுக் கட்சியிலிருந்து இடைநிறுத்தம் செய்துள்ளார்.

திருமதி சிறிமாவின் நடவடிக்கையை எதிர்த்து பதின்மூன்று உறுப்பினர்களும் இன்று நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல்செய்வர். [ம]

## திஸ்ஸமஹாராமை அகதிகளுக்கு உதவிகள் வழங்க மறுப்பு?

(மட்டக்களப்பு)

வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு திஸ்ஸமஹாராமையிலிருந்து மண்டூருக்கு அகதிகளாக வந்திருப்போரை மீண்டும் திஸ்ஸமஹாராமைவுக்கே அனுப்பி வைக்குமாறு [illegible] காப்பு அமைச்சின் செயலாளர் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. டிக்சன் நிலவீராவைப் பணித்துள்ளார்.

[6ம் பக்கம் பார்க்க]

## பாதிக்கப்பட்ட ஜி. ஸி. ஈ. உயர் மாணவருக்கு விசேட பரீட்சை நிலையத்தில் இன்று பரீட்சை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மலையகத்திலும் தென்னிலங்கையிலும் நிகழ்ந்துள்ள வன்செயல்கள் காரணமாகப் பாதிக்கப்பட்ட க. பொ. த. (ஜி. சி. ஈ.) உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாண

[6-ம் பக்கம் பார்க்க]

## அரசியல் தஞ்சம் கோரி வந்தவர்கள் கஷ்டப்படுகின்றனர்! ஜெர்மன் அமைச்சர் தகவல்

(கொழும்பு)

'இலங்கையிலிருந்து மேற்கு ஜெர்மனிக்கு அரசியல் தஞ்சம் கோரி வருபவர்களின் தொகை இப்பொழுது குறைந்துள்ளது இலங்கையிலிருந்து மேற்கு ஜெர்மனிக்கு வரும் இளைஞர்கள் அரசியல் தஞ்சமல்ல, வேலை கோரியே வருகிறார்கள். இலங்கை இளைஞர்கள் அரசியல் தஞ்சம் கோருவதற்கு இலங்கையில் எவ்வித காரணமும் இல்லை என்று நான் கருதுகிறேன்.'

மேற்கண்டவாறு இலங்கைக்கு வந்துள்ள மேற்கு ஜெர்மன் பொருளாதாரத்துறை அமைச்சர் டாக்டர் ஒடோகிரவ் லிப்ஸ் டோர்வ், கால்பேஸ் ஹோட்டலில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

**இளைஞர்கள் கஷ்டப்படுகிறார்கள்**

'மேற்கு ஜெர்மனிக்கு அரசியல் தஞ்சம் கோரிவந்துள்ள இளைஞர்கள் அங்கு பெரும் கஷ்டப்படுகிறார்கள். [illegible]

[6-ம் பக்கம் பார்க்க]

அரிய சந்தர்ப்பம்
DIPLOMA IN HOTEL MANAGEMENT பயிற்சி மீண்டும் ஒரு புதிய வகுப்பு ஆரம்பம் 2-9-81. O/L அல்லது NCGE படித்த இருபாலரும் சேரலாம் விண்ணப்பப்பத்திரத்தை பெற்று 30-8 81 முன் விண்ணப்பிக்கவும்.
நாஷனல் அக்கடெமி
(அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.)
மொம்சாக் கட்டிடம், இல. 11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 0691

உங்கள் முதலீட்டிற்கு வட்டி 27% வரை வழங்குகின்றோம்
அத்துடன் உங்களுக்கு
★ ஆயுள் காப்புறுதி இனம் ★ வீட்டுப்பாவனைப் பொருட்கள் (பணம் கொடுப்பனவு தவணை அடிப்படையில்)
நாம் உங்களுக்கு 41 வருடங்களாகச் சேவை செய்துவருகின்றோம் என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்கின்றோம்.
★ நம்பிக்கை ★ பாதுகாப்பு ★ ஸ்திரத்தன்மை
வடமாகாணத்திலேயே ஆகக்கூடிய முதலீட்டாளர்களைக் கொண்ட ஒரே ஒரு தனியார்துறை நிதிநிறுவனம்
TFC
த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்,
191, 249 சி, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம், போன்: 7680

## மணிவாக்கு

உலகில் தோன்றிய மேலோர் அனைவரும் ஊரார் உதவியைச் சார்ந்திருந்தவர் அல்லர். உண்மையைச் சார்ந்தமையால் அவர்கள் உறுதி மிகப்படைத்திருந்தனர். பிறபு ஊரார் அவர்களைப் பின்பற்ற வேண்டியிருக்கிறது.

# நமது நோக்கு

## தவிர்த்திருக்கக்கூடிய துன்பம்

நாட்டில் அமைதி நிலவும் செய்தி சோக உணர்வை தூண்டுகிறது. நாட்டின் பெரும்பான்மையின் வகுப்புவாதம் அபாயமான தென்றவர் காலஞ்சென்ற பிரதமர் நேரு.

யாழ்ப்பாணத்தில் ஆரம்பமான கொலை வெள்ள, தீவைப்பு-- இவ்வித தீமை பரந்துபட்டு வாழும் தமிழ்மக்களைத் தாக்கும் வகையில், பெரும்பான்மையினர் பேர்வழிகள் திட்டமிட்டு சட்டவிரோதச் செயலில் ஈடுபட்டது நாடறிந்ததே.

இந்நாடுகூட எதிர்பார்க்கும் வகையில் தமிழ் மக்கள் நேரடியாக அழியுக் கும் பலத்த சேதங்களுக் கும் உள்ளாகி அகதிகள் வடிவில் நாடெங்கும் காணப்படுகின்றனர். ஒன்றாகும் இன்னுமொரு தனி வெற்றி.

இரண்டாவது அந்நியாயம் ஆரம்பமாகும் வேளை நாட்டின் ஜனாதிபதியும், பிரதமரும் இந்த இக் கலவரம் பயங்கரவாதிகளுக்கு பெரும் வாய்ப்பாய் அமைந்தது. ஆனால் கோட்டை ஆக்கிரமிப்பு தமிழ் மக்களுக்கெதிரான திட்டமிட்ட தாக்குதலை தீர்ப்படுத்தியதென்று சொல்லலாம்.

பத்துநாட்கள் நடந்து வந்த பயங்கரத் திருவிழாவை உடனடியாகக் கட்டுப்படுத்தவும், ஒரு முறை நடந்தேறிய வன்செயல்கள் மீண்டும் அதே இடத்திலாவது மறுதலிக்காமல் மட்டுப்படுத்த முடியாததும் அரசின் நடவடிக்கையில் தமிழ்மக்கள் அவநம்பிக்கை கொள்ள இடமளித்தது.

நாட்டின் ஒருபகுதியினருக்கு அழிவு ஏற்பட்டால் அது ஆட்சியைப் பலவீனப்படுத்தும் பயங்கர நிலையை இதுவே உருவாக்குமென்பதை நன்கறிந்தவர் ஜனாதிபதி ஜெயவர்த்தனா.

சுமாதானம் காணப்பட்டதால் காமதித்தபோது தவிர்த்திருக்கக்கூடிய துன்பத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் தீவிர நடவடிக்கையில் அரசு இறங்கிப் பெரும் நிலைமையை இனி பாதுகாப்புச் சீராக்க உதவும்.

நாட்டில் அடங்கா அழிவு களையும், சேதங்களையும் அரசு எவ்விதத்தில் அணுகப்போகிறது? புலனாய்வு குழுக்களுக்கு மறைவாக மறைந்துகொண்டிருக்கும் மனிதர்களால் ஆபிந்திருக்கும் இப்புகளுக்கும் இன்னல் களுக்கும் எவ்வகையிலும் ஈடுகொடுக்கமாட்டார்.

இது இனக்கலவரம் அல்ல என்று அரசு சொல்வதிலும் ஒரு தனி இனிமை உண்டு. இரு இனத்தினர் ஒருவரை ஒருவர் தாக்கி கலவரப்பட்டால் அதை இனக்கலவரம் எனலாம்.

தமிழ் மக்களை -- இலங்கைத் தமிழர், இந்திய வம்சாவளியினர் -- இவர்களை தனிக்கப்பிடித்து, ஆயுதபாணிகள், வெடிகுண்டுகள் பயங்கர ஆயுதங்கள் சகிதமாய்த் தாக்கிய ஒரு தலைச் சம்பவங்களை இனக் கலவரம் என்று சொல்லுவது பொருத்தமில்லை.

பலதிறப்பட்ட மோதல்கள், பூசல்கள் நிறைந்த இன்றைய உலகில், ஒரு நாட்டில் நிகழும் அநீதி, ஒரு சமுதாயத்தவரின் அடிப்படை உரிமைகளை அழிந்து ஒழிதல். அவர்களை ஒடுக்க நேரிட்டால் அதனைப் பிரஸ்தாபித்து, எதிர்ப்பு, அனுதாபம் -- வேண்டுமானால் உதவி வழங்கும் உலகமனப் போக்கு ஒன்று உருவாய் வருவதை நாம் எவரும் தடுத்துவிட முடியாது. உள்ளூர் விடயமெனபதற்கும் எல்லை உண்டு.

தப்பான பிரசாரத்தை இந்நாட்டுமக்கள்-- தமிழர்கள் குறிப்பாக-- வேறெங்கும் பரப்பிவருவது சரியல்ல. சட்டவிரோதமானதும், அதேசமயம் தங்களுக்கேற்பட்ட இம்சைகள், சமுதாயத்தைச் சீகுலைக்கு மளவிற்குத தொடருமானால், அதின் பாதுகாப்பு கிடையாத நிலையில் சர்வதேச அனுதாபத்தை தேடுவது தவிர்க்க முடியாத செயலாகும்.

இந்த வகையில் அண்டை நாடாகிய இந்திய நல்லும் விழிப்புணர்வும், ராஜதந்திர கண்காணிப்பும், சட்ட ஆட்சியிலும் ஜனநாயகப் பண்பிலும் ஊறியுள்ள மேற்கத்திய நாடுளின் ஆதரவும், அனுதாபமும், இந்நாட்டில் இக்கட்டான நிலையில் வாழும் தமிழ் மக்கள் தனித்தவர்கள் அல்ல என்பதை வற்புறுத்துகின்றன.

இன்றைய பொதுமக்கள் ராஜதந்திர மெளன பாடத்தை கரைத்துக்குடித்தவர்கள். அவர்கள் எச்சமூகத்தைச் சேர்ந்தவர்களாகவிருந்தாலும், இலகுவில் ஏமாற்றப்பட மாட்டார்கள்.

குழப்பம் எது? என்ன அடிப்படைக் காரணம்? என்ற பரம இரகசியங்கள் ஒரு சிறு குழுவினர் மேல் மட்டத்தில் அந்தரங்கமாக ஆராய்ந்து முடிவெடுக்கும் விடயங்கள் அல்ல.

உலகம் பலனாலும் பிறக்கின்றது; நியாயம், மக்கள் உண்டாக்கிய நீதிமன்றமாகிய பாராளுமன்றத்தில் பிறக்கட்டும்!

## பிரவேசப்பத்திரம் இன்னும் இல்லை

[புலோலி]

ஜி.சி.ஈ. [சாதாரண] பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பித்த மாணவி ஒருவருக்குப் பரீட்சைப் பிரவேசப் பத்திரம் வந்து சேராதபடி யால் பரீட்சை எழுதமுடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளதாம். வல்வெட்டித்துறையைச் சேர்ந்த செல்வி ஸ்ரீதேவி ஸ்ரீஸ்கந்தராசா என்ற மாணவிக்கே இவ் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

பரீட்சை ஆரம்பித்த தினத்தன்று பரீட்சை ... பரீட்சைஸ்தான இலக்கத்தைக் கொண்ட பரீட்சை மண்டபங்களுக்குச் சென்று விசாரித்தும் எதுவித பயனும் கிடைக்கவில்லையாம்.

இதனால் பிரஸ்தாப மாணவி மிகுந்த கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் ஆளாகியுள்ளார்.

[அ]

# "முருகனை கலைகளினால் வாழ்த்தினால் வேண்டும்வரம் அளிப்பான்"

[புலோலி]

"உலகம் உய்வதற்கு வந்துதித்த முத்தமிழ்ப் பிரியனை முருகனைக் கலைகளினால் வாழ்த்தும்போது, வரங்களை அள்ளி அள்ளி அவன் வழங்குவான். முருகன் சந்நிதியிலே பூசை வழிபாடுகள் இசைக்கலையின்றிப் பூர்த்தியடையாது."

இவ்வாறு, பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கலாமன்றத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்து வாழ்த்துரை வழங்குகையில் குறிப்பிட்டார்.

"முருகக்கடவுளின் செல்வச் சந்நிதியிலே முருகனை இசைக் கலையால் சேவிக்கும்போது நாம் பெறுதற்கரிய இன்பத்தைப் பெறமுடியும் முருகன், செந்தமிழ்க் கலைஞானதேசிகன் என்று போற்றப்படுகின்றான். பக்திபண்ணுவதற்கு சிறந்த சாதனம் இசைக் கலையேயாகும். இறைவன் இசைவடிவிலே இருக்கின்றான். இசை அதற்குரிய இலட்சணங்களுக்கு அமைவாக எழுப்பப்படவேண்டும். பக்திப் பனுவல்கள் பாடபேதமின்றி பயிலப்படவேண்டியதுடன், அவை பண்ணோடும் தாளத்தோடும் இசைக்கப்படவேண்டும்.

"சங்கீதமென்னும் வடமொழிப் பதத்திற்கு தமிழ் நல்லிசையாகும். நல்லிசையை இசைக்கும்பொழுது உள்ளத்திலே இறைபக்தி உண்டாகும் சங்கீத நல்லிசை காதிற்கு இனிமையாக இன்னிசையாக எழுப்பப்படும்பொழுது தேவகானத்திற்குச் சமமானதாகின்றது.

"அருங்கலைகளினால் இறைவனைச் சேவிப்பதன் மூலம் இறைவன் எளிதில் வசப்படுகிறான். பக்திமார்க்கத்திலே ஆலய வழிபாட்டின் நித்திய நைமித்தியங்களில் அருங்கலைகளுக்கு முக்கிய இடமுண்டு. பூமாலை கட்டி இறைவனைத் துதிப்பதைப்போல பாமாலை சூட்டியும் இறைவனைத் துதிக்கும் முறையைப் பக்திமார்க்கம் வலுப்படுத்துகின்றது."

## மக்கள் கருத்து

### நாவலர்சபை முயற்சிக்கு ஆதரவு நல்குக

கந்தபுராண வசனம், சத்திய ரூபமாக இன்று நூறு ஆண்டுகளுக்குமுன் தவத்திரு ஆறுமுக நாவலர் அவர்களால் செய்யப்பெற்றதாகும்.

கற்றோரும், கல்லுவல்லோரும், சாதாரண மக்களும் அறிந்து உய்யும்பொருட்டு நல்லூர் தந்த ஞானி ஞாயிறுவால் உருவாக்கப்பெற்ற இப்புராணம்பற்றி அறிந்தார் மிகச் சிலரே.

செய்யுள் வடிவத்தில் அமைந்துள்ள படைப்பை எல்லோரும் வாசிப்பதென்பது இலகுவான காரியமில்லை. இந்நிலையில் மக்கள் அனைவரும் கந்தபுராணத்தை அறியவேண்டும் என்ற பெருவிருப்பினால் உந்தப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்சபை பல ஆயிரம் ரூபாய் செலவு செய்து இதனை அச்சேற்றித் தந்துள்ளது வரவேற்கத்தக்கதாகும்.

கந்தபுராணம்பற்றி அறிந்து இன்புற விழைகின்ற அனைவரும் இச்சந்தர்ப்பத்தை விட்டுவிடாது, நாளைக்காலை நல்லை ஆதீனத்தில் நடைபெறும் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்து சபையின் முயற்சிக்கு ஆதரவு நல்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

க. இளையதம்பி
வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.



### இன்று நல்லூர்க் கந்தன் 17-ம் திருவிழா

முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகுஞ் செயறந் தணர்வென்றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவும்
குரு புங்கவ வெண்குண பஞ்சரனே

—கந்தரநுபூதி.


உங்கள் வைப்புத் தொகைக்கு உயரிய வருமானம் உறுதியான பாதுகாப்பு

22% வரை வருட வருமானம் பெறும் 1 வருட சேமிப்புத் திட்டம்.

27% வரை வருட வருமானப் பெறும் 2 வருட சேமிப்புத் திட்டம்.

மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்

இலங்கையில் அதி பெரியதும் உறுதிவாய்ந்ததுமான ஓர் நீதி நிறுவனம்.

மாதாந்தமோ முதிர்ச்சியின் பின்னரோ வருமானம் செலுத்தப்படக் கூடிய திட்டங்களைக் கொண்டது.

பாரிய அளவிலான மூலவளங்களைக் கொண்ட நிறுவனம்

மொத்த ஆதனம் ரூபா 32 கோடிக்கும் மேல் மூலதனமும் ஒதுக்கீடுகளும் ரூபா 4 கோடிக்கும் மேல்

பொது மக்களின் நம்பிக்கையைப் பெற்று மகிழும் நிறுவனம்.

6500 க்கும் அதிகமான வைப்பாளருடன் ரூபா 17 கோடியே 5 லட்சத்திற்கும் மேலான தொகையினை வைப்புப்பணமாகக் கொண்டது.

மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்

51, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 1. தொலைபேசி: 26611 - 8.

கிளைகள்:

யாழ்ப்பாணம் : 11/8 ஸ்ரான்லி றோட். தொலைபேசி: 321
மாத்தறை : 27 1/1 தர்மபால மாவத்தை. தொலைபேசி: 2466
அனுராதபுரம் : 2. ஹரிஷ்சந்திர மாவத்தை. தொலைபேசி: 534
கண்டி : 115. (1ம் மாடி) கொட்டுகொடல வீதி. தொலைபேசி: 4196
செயற் துணைவர்கள் (ஏஜெண்டமார்) எல்லா முக்கிய நகரங்களிலும் உள்ளனர்.

"மேலதிக விபரங்களுக்கு எமது யாழ்ப்பாணக் கிளை அலுவலகத்தை நாடவும்

MASTERS

# மலையக பாதுகாப்புக்குத் தொண்டர் சேவை!

[ஹட்டன்]

மலையகத்தவரின் பாதுகாப்பினை முன்னிட்டு அப்பகுதியைச் சேர்ந்த தோட்டத் துரைமார்கள், தொண்டர் சேவைப் பிரிவுகளை ஆரம்பித்துள்ளனர்.

வணக்கத்துக்குரிய ஜெவ்ரி அபயசூரிய, ஹட்டன் புனித ஜோசப் கல்லூரி அதிபர் திரு எஸ். கிருஷ்ணன் ஆகியோரும் பாதுகாப்பு நடவடிக்கையில் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

மலையகத்தில் மேலும் அசம்பாவிதங்கள் நடைபெறுவதை தடுக்கும்பொருட்டு ஆயுதம் தாங்கிய பொலிஸாரும், டிகோயா, அப்கொட், நோர்வூட், மஸ்கெலியா, பொகவந்தலாவ ஆகிய பகுதிகளில் தீவிர ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

## பாடசாலை எரிப்பு: நால்வர் கைது

இதே வேளையில் பொகவந்தலாவ புனித மேரிஸ் கல்லூரி மண்டபம் ஒன்று இனந்தெரியாத நபர்களால் தீவைக்கப்பட்டுள்ளது. இதனால் ஒரு லட்சம் ரூபா வரையில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்செயலை அடுத்து ஹட்டன் பொலிசார் நால்வரைக் கைது செய்துள்ளனர். உதவிப் பொலிஸ் அதிபர் திரு. இசுறுபால தலைமையில் விசேட விசாரணைப் பிரிவினர் புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ)

# அரசியல், தொழிற்சங்க கூட்டங்களுக்குத் தடை

[கொழும்பு]

நாட்டின் பாதுகாப்பை முன்னிட்டுச் சகல அரசியல் கூட்டங்களையும், தொழிற்சங்கக் கூட்டங்களையும் இரு வாரங்களுக்கு அரசாங்கம் தடை செய்துள்ளது.

இதுபற்றிப் பொலிஸ் தலைமைக் காரியாலய அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், இத்தடைகளை உடன் அமுல் நடத்தும்படி சகல பொலிஸ் பொறுப்பதிகாரிகளையும் பணித்துள்ளதாகக் கூறினார்.

பஸ்நிலையம், ரயில் நிலையம், வைத்தியசாலைகள் தபால் கந்தோர்கள் ஆகிய சன நடமாட்டமுள்ள இடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் கூட்டமாகக்கூடி நிற்போர்மீதும் கண்காணிப்பு மேற்கொள்ளும்படி பணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## கார் அகப்பட்டது

[வேலணை]

அல்லைப்பிட்டியில் நிகழ்ந்த துப்பாக்கிச்சூட்டுக் கொலைச் சம்பவத்துக்குப் பாவிக்கப்பட்ட கார், ஊர்காவற்றுறைப் பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வேலணை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்துக்கு அருகாமையிலுள்ள வெளியில் இக்கார் அநாதரவான நிலையில் கண்டுபிடிக்கப்பட்டு, ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச்செல்லப் பட்டது.

அரசியல்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கட்சித் தலைவர் திரு அமிர்தலிங்கத்தை நான் சந்தித்தேன். மேற்கு ஜெர்மனியில இலங்கை இளைஞர்கள் கஷ்டப்படுவதை தாம் நேரில் கண்டதாக திரு. அமிர்தலிங்கம் என்னிடம் தெரித்தார். இலங்கையில் அண்மையில் இடம்பெற்ற வன்செயல்கள் பற்றி திரு. அமிர்தலிங்கம் என்னிடம் விரிவாக எடுத்துரைத்தார்.

## அமைதிக்குப் பங்கம்

'அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலிருந்து பெறும் ஆயுத உதவியைக் கட்டுப்படுத்த எமது நாடு முடிவுசெய்துள்ளது.

'இன்று உலகைப் பாதிக்கும் மிக முக்கியமான பிரச்சினை அமைதிக்கு ஏற்படும் பங்கமாகும். சர்வதேச சட்டங்களை மீறுவதே இப்பிரச்சினைக்குக் காரணமாகும்' என்றார். [ம-வெ]

# ...யும் நடக்கிறது

தொழிற்சங்கவாதி எஸ். செல்லத்துரையை அறியாதவர்கள் இருக்கமாட்டார்கள்.

யாழ் கச்சேரியில் இவர் நீண்டகாலமாக கடமையாற்றியதும், அரசாங்க சேவை ஊழியர் சங்க யாழ்ப்பாணக் கிளைத் தலைவரான இவர் கடந்த வருடம் ஜூலை மாத வேலைநிறுத்தத்தில் குதித்து, பின்னர் சுகவீனம் காரணமாக யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானதும் தெரிந்ததே.

இவர் பெயருக்கே இப்பொழுது ஒரு அரச அழைப்பு வந்திருக்கிறது! சங்கதி என்ன தெரியுமா?

இம்மாதம் முதல் வவனியா கச்சேரியில் கடமையாற்றும்படி!

ஃ ஃ ஃ

இளவரசர் சாள்ஸ்—டயானா சிமோட்டி திருமணம் பற்றி ஒரு சில தகவல்கள்;

திருமண மோதிரத்துக்கு இளவரசர் சாள்ஸ் செலவழித்தது 23 500 பவுண். எலிசபெத் மகாராணியின் தனிப்பட்ட செலவு 25,000 பவுண். திருமண 'கேக்' செலவு 5,000 பவுண்.

ஒரு சிறு குறிப்பு: இலங்கை நாணயத்தின்படி ஒருபவுண் சுமார் 35 ரூபாவாகக் கொள்க.

— ஊடுருவி

# 'இ.போ.ச. யாழ். பிரிவுகளை அ. சபை ஏற்கவேண்டும்'

## பிரேரணை வருகிறது

[யாழ்ப்பாணம்]

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாணப் பிரிவுகளை, யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை பொறுப்பேற்று எல்லாச் சேவைகளையும் நடாத்தவேண்டும் என்ற பிரேரணை ஒன்று யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் கொண்டுவரப்படவிருக்கிறது.

மாவட்டசபை உறுப்பினர் திரு. க. சின்னத்துரை இத்தீர்மானத்தை இம்மாதம் 25ந் திகதி நடைபெறவிருக்கும் கூட்டத்தில் கொண்டுவருவதற்கான முன்னறிவித்தலைக் கொடுத்துள்ளார். [மா]

விசேஷ பரீட்சை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வர்கள், யாழ்ப்பாணத்தில் பரீட்சை எடுப்பதற்கேற்ற ஒழுங்குகளை வட மாநிலக் கல்வியதிபதி திரு. கோ. சிவநாதன் செய்துள்ளார்.

இப்பரீட்சை இன்று ஆரம்பமாகிறது.

சகல உடைமைகளையும் இழந்து வடபகுதிக்கு வந்துள்ள இம்மாணவர்களுக்கான பரீட்சை, கல்வியதிபதியின் நேரடிக்கண்காணிப்பில் கல்வித் திணைக்கள வளவுக்குள் இருக்கும் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இது சம்பந்தமாகச் சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகளைத் தம்முடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு வடமாநிலக் கல்வியதிபதி அறிவித்துள்ளார். [மா]

அமைச்சரவைக் கூட்டத்தில்

# தொண்டமான் அறிக்கை: சர்ச்சைக்குரிய 4 வார்த்தை

[கொழும்பு]

கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் அண்மையில் வெளியிட்ட அறிக்கை தொடர்பு நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதியின் கவனத்திற்கு எடுக்கப்பட்டது.

'அவரது அறிக்கையில் காணப்பட்ட நான்கு வார்த்தைகள் தவிர ஏனையவை சரியானதாகவே உள்ளன' என்றும் இதனை திரு. தொண்டமானே ஏற்றுக்கொண்டார் என்றும் 'It, Should, Say, So' என்ற நான்கு வார்த்தைகளே சர்ச்சைக்குரியதாகும் என்றும் அமைச்சர் திரு. அதுலத்முதலி தெரிவித்தார். [ம]

## இளைஞர் பேரவை கூட்டம் ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

தமிழ் இளைஞர் பேரவை அதன் பொது நிகழ்ச்சிகள் யாவற்றையும் அவசரகால நிலை காரணமாகப் பின்போட்டுள்ளது. இதனடிப்படையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்த பொதுக் கூட்டமும் மற்றும் நிகழ்ச்சிகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகப் பேரவையின் அமைப்புச் செயலாளர் மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.

## திஸ்ஸ மஹாராம...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர், கல்வாஞ்சிக்குடி உதவி அரசாங்க அதிபர் ஆகியோர் அகதிகளிடம் சென்று திஸ்ஸமஹாராமைக்குத் திரும்புமாறு கேட்டபோது, 'நாங்கள் திரும்பமாட்டோம்; இங்குதான் தொடர்ந்து வாழுவோம்' என்று அகதிகள் அறிவித்ததாக அறியப்படுகிறது.

இதைத் தொடர்ந்து, அரச காணிகளில் குடியேற அனுமதி வழங்கப்படமாட்டாதென்றும் சமூக சேவைப்பகுதியினரின் எந்த உதவியும் கிடைக்கமாட்டாதென்றும் அரச அதிகாரிகள் அகதிகளிடம் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

மண்டூரில் குடியேறிய சுமார் 200 அகதிகளுக்கும் பட்டிருப்பு எம். பி. உதவிகள் வழங்கி வருகின்றார்.

## கோரிக்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுத் தேர்தலொன்றை அரசாங்கம் நடத்துமானால் நாங்களும் அரசாங்கமும் ஏன் தோற்போம் என்று தெரியும்.

### திட்டமிடப்பட்ட செயலாகும்

'யாழ்ப்பாணச் சேனையில் என்னை விளையாட்டு விழாவிற்கு அழைத்தமைக்காகப் பிரிப்பிட்டியாவிற்கு இடமாற்றம் செய்யப்பட்ட குருநாதன் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

'நாட்டின் பல பகுதிகளிலும் அண்மையில் இடம்பெற்ற வன்செயல்கள் முற்றிலும் திட்டமிடப்பட்ட சம்பவமாகும். தற்போதும் தமிழ் மக்கள் இப்பகுதிகளில் அச்சத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர்.

'தமிழ்ப் பகுதிகளில் எந்தவொரு சிங்களவரோ, அவரின் உடைமைகளோ தாக்கப்படவில்லை.

### விசாரணை பயனற்றது

'வன்செயல்கள் தொடர்பாக விசாரிக்க நியமிக்கப்படும் விசாரணைக் குழுக்கள் பயனற்றவை

### 20,000 பிரதிகள்

"எனக்கெதிராகப் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையின்போது நிகழ்த்தப்பட்ட பேச்சுக்களில் 20,000 'ஹன்சாட்' பிரதிகளை அரசு அச்சகத்தில் அச்சிட்டு, கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் சிறில் மத்தியூ தனது உத்தியோகபூர்வமான முத்திரையுடன் இலங்கைப்படத்துடன் எங்கும் அனுப்பியுள்ளார்.

'அதில் வடக்கு, கிழக்கில் 283 பௌத்த ஆலயங்கள் இருந்ததாக திரு. சிறில் மத்தியூ தெரிவித்துள்ளார்.

''அரசாங்கத்திற்கு எதிரான சக்திகளை பொலிஸ்நிலையத்தின் மீது தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன.

''கொழும்பில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள், பிலியந்தலையிலுள்ள மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தில் தயாரிக்கப்பட்டதாக எனக்குத் தெரியவந்துள்ளது. இதனை ஜனாதிபதியின் கவனத்திற்கு நான் கொண்டுவந்துள்ளேன்.

''நாடு முழுவதும் பாதுகாப்புச் சபைகளை அமைக்கவேண்டும் என்று நான் ஜனாதிபதியிடம் வற்புறுத்தியுள்ளேன்'' என்றார். [ம-வெ]


# மிகவும் குறைந்த விமானக் கட்டணத்தில்

- மத்தியகிழக்கு
- சிங்கப்பூர்
- பாரிஸ்
- நைஜீரியா
- லண்டன் ரூபா 7,500-00 (ஒருவழி)
  ரூபா 14,205-00 (இருவழி)

மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும்

உலகின் எப்பாகத்துக்கும்

- எவ்வித கூடுதல் கட்டணமுமின்றி நீங்கள் விரும்பிய விமானத்தில் பிரயாணஞ் செய்வதற்குரிய

விமான டிக்கட்டுகள்

வங்கியில் அறவிடப்படும் அதே கட்டணத்தில் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பிரயாணக் காசோலைகள்

★ நைஜீரியன் விசா

ஆகியவற்றைக் கொழும்பு செல்லாமல் யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளப் பிரபல்யமான MACKINNON, MACKENZIE & Co. of CEYLON LIMITEDன் ஒரேயொரு யாழ்ப்பாணக் கிளையான எங்களை நாடுங்கள்

## மக்கினென்ஸ் ட்றவல் சேவிஸ் (சிலோன்) லிமிட்

8, பருத்தித்துறை வீதி - யாழ்ப்பாணம்.
த. பெ. எண் 92 தொலைபேசி: 8154



# தொழிற் பயிற்சிகள்

பொறியியலாளர்களால் நவீன முறையில் வெல்டிங் (Electric & Gas). இலெக்றிக் வயறிங், [Radio Officers Certificate] பயிற்சிகள் நடாத்தப்படும் இலவச கைவேடித்த விண்ணப்பிக்கவும்.

NATIONAL INSTITUTES

57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாடு' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post office: Sri Lanka. Regd. Q. B. 100/2/6/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.